


## மேஜர் லத்தீப்

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டப் போராளிகளின் சுய விபரக்கோவையைப் புரட்டிப் பார்த்தால் கல்வி என்று குறிப் பிட்டிருக்கும் இடத்திற்கு நேரே பெரும்பாலும் எட்டாந்தரமோ அதற்குக் கீழோதான் காணப்ப டும். இவர்களது குடும்பங்கள் தங்கியிருக்கும் இடங்களை வீடு என்று சொல்ல முடியாது. தள பதி ஜோயிலிருந்து எல்லோரது நிலைமையும் அப்படித்தான். அவ்வாறான மிகக் கஸ்டமான குடும்பங்களிலொன்றிலிருந்து போராட்டத்திற்கு வந்தவன் தான் லத்தீப். கிரானைச் சேர்ந்த கந்தையா தம்பதியின ரின் ஐந்து ஆண்பிள்ளைகளில் ஒருவன்தான் சண்முகநாதன் என்ற லத்தீப். இவனுக்கு நான்கு சகோதரிகளும் இருந் தனர். குடும்பத்தின் வறுமை நிலை இவன் தன் கல்வியை 7 ஆம் தரத்திற்கு மேல் தொடர அனுமதிக்கவில்லை. இயக்கத் தில் இணையும் வரை கூலி வேலைகள் செய்தான், தோட் டம் செய்தான், மிகக் கடுமை யாக உழைத்தான்.

இவ்வாறாக மிகக் கடுமையான உழைப்பாளிகளாக இருப்பத னால் தான் மட்டக்களப்பு போராளிகள் ஒரு தாக்குதலுக்கு முப்பத்தைந்து தொடக்கம் ஐம் பது மைல்கள் வரை நடக்க வேண்டியிருந்தாலும் அலுத்துக் கொள்வதில்லை. ஆயுதங்கள், மேலதிக ரவைகள், முதலுதவிக் கான மருந்துகள், வழியில் எதிர்ப்படும் ஆறுகளைக் கடக் கத் தேவைப்படும் கயிறுகள் மற் றும் இன்னோரன்ன பொருட்க ளையும் சுமந்தபடி இவ்வளவு தூரம் நடந்து செல்வதென்றால் இலேசான காரியமல்ல.

சிங்கபுர, கள்ளிச்சை, வட முனை போன்ற மிக நீண்ட தூரத்தில் உள்ள இடங்களுக்கு சென்று தாக்குதல் நடத்தும் போது யாராவது காயப்பட்டால் அது மிகப் பெரிய சிரமம். காயப் பட்டவர்களையும் சுமந்து கொண்டு எதிர்ப்படும் ஆறுக ளையும் கடந்து வருவதற்கிடை யில் சிலர் மரணிப்பர். தம்முடன் கூடி வாழ்ந்த, போராடிய நண் பனுக்காக நின்று அழக்கூட நேரமிருக்காது. நடையின் வேகத்தை தளர்த்துவது ஏனைய காயப்பட்ட போராளிகளது உயி ருக்கு பங்கம் விளைவிக்கலாம். ஆகையால் வைத்தியம் செய்யக் கூடிய பாதுகாப்பான பகுதியைச் செல்லும் வரை அதே நடை. இது அவர்களுக்குப் பழக்கப் பட்டு விட்டது. இப்படியான

இடங்களுக்கு தாக்குதலுக்குச் செல்லும் போது தங்களுடன் லத் தீப் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள். அவனது பகிடி-சேட்டைகளை ரசித்துக் கொண்டு வரும்போது நடையின் கஸ்டத்தை மறந்து விடுவார்கள். அதிலும் ஒருவ ரைப் போன்று பாவனை செய் தல், அவரைப் போலவே கதைத்தல் என்பன லத்தீப்புக்கு கைவந்த கலை. இயக்கத்தில் எவரையும் இவன் விட்டுவைப்ப தில்லை எல்லோரைப் போலவும் கதைப்பான். ஆகவே நடந்தப டியே இவனது சேட்டைகளை ரசித்துக் கொண்டு செல்வார் கள்.

எதிரிகளின் எல்லையைத் தேடிச்சென்று நடத்தப்படும் இத் தாக்குதல்கள் மிக முக்கியத்து வம் வாய்ந்தவை. இவ்வளவு கஸ்டத்துக்கு இடையில் தாக்கு தல்கள் செய்வது பெரும்பாலும் வெளியில் தெரியாது. வெளியுல கத்தைப் பொறுத்தவரை 'கள் ளிச்சை வடமுனையில் 20 இரா ணுவம் பலி. 20 ஆயுதங்கள் மீட்பு' இவ்வாறாகத்தான் செய்தி இருக்கும். இந்தத் தாக்குதல் கள் எல்லாம் இல்லாவிடில் சிங் களக் குடியேற்றத்தால் மட்டக் களப்பு கபளீகரம் செய்யப்பட்டி ருக்கும். எமது போராட்டம் முனைப்படைய முன்னர் கடற் கரையோரமாக கல்குடா, புன் னக்குடா என்று சிங்கள மீனவக் குடியேற்றங்கள்-மேற்குப் பக்க மாக வேப்பவெட்டுவான் வரை சிங்களக் குடியேற்றங்களின் கல் வாடி-ஏன் மட்டக்களப்பு நகர மரக்கறிச் சந்தை கூட குடியேற் றவாசிகளின் கையில்தான் இருந்தன. லத்தீப்பின் இவ்வா றான தாக்குதல்கள் இல்லாவி டில் மட்டக்களப்பு-திருமலை மாவட்டங்கள் கூட சிங்களக் குடியேற்றங்களால் துண்டாடப் பட்டிருக்கும்;

சிறிலங்காப் படைகளுடனான இரண்டாம் கட்டப் போர் ஆரம் பித்த பின்னர் இடம்பெற்ற கல் முனை முகாம் தாக்குதல்கள், அக்கரைப்பற்று காவல் நிலையத் தாக்குதல்கள் என்பன லத்தீப் பின் திறமையை வெளிப்படுத் தின. தும்பங்கேணியில் இவன் நடத்திய தாக்குதலுக்கு ஐந்துக் கும் மேற்பட்ட ஆறுகளைக் கடக்க வேண்டியிருந்தது. வெட் டவெளிப் பிரதேசமான மண்மு னைத் துறைப்பகுதியில் கூட சிறிலங்காப் படைகள் மீது தாக் குதல் நடத்தினான். வெள்ளமோ வெளியோ புலிகளின் தாக்குதல் திறனைப் பாதிக்காது என்பதைப் புலப்படுத்தினான். எல்லா இடங் களிலும் ஆயுதங்களைக் கைப்பற் றினான்.

இவன் மிகவும் அதிசயமான முறையில் தப்பியது தொப்பிம லையில் இடம்பெற்ற இராணுவ முற்றுகையின் போதுதான். அந்த முற்றுகையை முறியடிக் கும் நோக்கில் இவன் 50 பேர் கொண்ட ஒரு குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றான். இராணுவ அணியொன்றை அடித்து விரட்டிக் கொண்டிருக் கையில் ஏற்கனவே அப்பகுதி யில் இராணுவத்தினர் அமைத் திருந்த வியூகத்தினுள் இவனது குழுவினர் சிக்கி விட்டனர். இராணுவத்தினரின் எரிகுண்டு களினால் அப்பகுதியிலிருந்த இலுக்குப் புற்கள் பற்றி எரிந் தன. எங்கும் நெருப்பு-புகை திசையே தெரியவில்லை. கடு மையான அந்தச் சண்டையில் இவன் தனது குழுவினரில் 22 பேரை இழந்தான். ஏனை யோரை மிகச் சிரமத்தின் மத்தி யில் காப்பாற்றிக் கொண்டு வந் தான். அந்த முற்றுகையில் மிஞ் சியது இவனது அணி மட்டுமே. ஆகாயத்தில் போர் விமானங் கள், தரையில் நெருப்பு, எதிரே இராணுவம், இவற்றுக்குள்ளால் இவனது அணி தப்பி வந்த விதத்தை இன்றும் கதைகதை யாக கூறுகின்றனர் மட்டக்களப் புப் போராளிகள்.

தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்வதைவிட இருப்பதைக் கொண்டு வாழ்வதே ஏற்றது என் பது இவனது நடைமுறை. தனது போராளிகளுக்கு அடிக்கடி எமது பொருளாதார நிலைமைகளைச் சுட்டிக்காட்டுவான். தன்னைப் போலவே வாழப் பழக்குவான். வீரத்திலும் தன்னைப் போலவே அவர்களையும் உருவாக்கினான். அனுபவமே சிறந்த ஆசான் என் பதற்கு இவனது வாழ்க்கையே உதாரணம். போராட்டத்தைப் பற்றி இவன் விளக்கும் விதத் தைப் பார்க்கையில் இவன் ஏழாம் வகுப்புப் படித்தவன் என்று யாருமே சொல்ல மாட் டார்கள். ஒரு பேராசிரியராகவே இவன் விளங்குவான்.

14. 2. 1992 அன்று ஆயித்திய மலை 6-ம் கட்டைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்தவன் இவனே. தாக்குதலுக்குச் செல் -லும்முதல் வழமைபோல் கலக லப்பாகவே இருந்தான். தங்க ளைச் சிரிக்க வைப்பது இது தான் கடைசித்தரம் என்பது தெரியாமல் அனைவரும் அவ னது சேட்டைகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

நாய் மாதிரிக் குரைப்பான். சோம்பலுடன் நாய் எப்படித் திரும்பிப் பார்ப்பது என்று அபி நயம் செய்வான். இவன் பயிற் சிக்காக வந்த காலத்திலேயே இந்தச் சுபாவம் இருந்தது. இப் போது அணித்தலைவனாக வந்த பின்னர் கூட மாற வில்லை. இனியும் மாறக் கூடாதென இவனது நண்பர்கள் நினைத்துக் கொண்டனர். அப் போதுதான் இவன் சொன்னான். இந்தத் தாக்குதலில் லத்தீப் திரும்பி வரமாட்டான். நீங்க லத் தீப்பிட்ட கேக்கிற த்கவலை கேட்டுக்குங்க. வேணுமெண்ட மாதிரி போட்டோ புடுச்சுக்குங்க என்றான்.

விளையாட்டாக இவன் சொன் னது தமது வாழ்நாளில் மறக்க முடியாததாக அமையுமென்று அப்போது எவருமே நினைக்க வில்லை.

அந்தத் தாக்குதலில் எதிரியின் 15 ஆயுதங்கள் கைப்பற்றப்பட் டன. ஆனால் தாக்குதலின் ஆரம்பத்திலேயே வீரச்சாவை எய்திய லத்தீப்பினதும் அவனது உடலைக் காப்பாற்றப்போய் வீரச் சாவு அடைந்தவர்களுமான 13 போராளிகளின் உடல்களைச் சுமந்து வரும்போது அவர்களின் மனம்-வீரச்சாவு அடைந்தவர்க ளின் புகமுடல்கள் எல்லாமே பாரமாகத்தான் இருந்தன அவ னது நண்பர்களுக்கு. ஏனெனில் அன்று அந்தப் பயணத்தைக் கலகலப்பாக்க லத்தீப் இல்லை.

இப்போதெல்லாம் மட்டக்களப்பு பிராந்திய விசேட தளபதி "இந்த சீசனில் என்ன பகிடிய டாப்பா" என்று கேட்பதில்லை. இதைச் சொல்லத்தான் லத்தீப் இல்லையே-ஆம் இவன் மறை வுடன் சிரிப்பே வற்றிவிட்டது மட்டக்களப்பு மண்ணில்.

# இராணுவ வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக புலிகளுடன் அரசு சமரசம் செய்யவேண்டியுள்ளது

## ■ மறுமலர்ச்சிக்கழகக் கூட்டத்தில் திருநாவுக்கரசு உரை

தாராளப் பொருளாதாரக் கொள்கையினால் மேற்குலக நாடுகளும், இலங்கையும் ஒரு சுமூகமான தீர்வை இனப்பிரச் சனைக்கு முன் வைக்கலாம்"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத் தில் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கழகத்தின் 12வது ஆண்டுக்கூட் டத்தில் "உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் இலங்கை அர சியலும்" என்ற தலைப்பில் மு. திருநாவுக்கரசு பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது இன்று அமெரிக்க ரஸ்ய காதல் உறவில் பாதிக்கப்படுவது மூன் றாவது உலகநாடுகளே. இது தான் இன்றைய சர்வதேச உள் நாட்டு வெளிநாட்டு பரிமாண மாகும்.

இலங்கையின் பொருளாதார வளத்தை வெளிநாட்டு உதவி களும் புலிகளும் தான் தீர்மா னிக்க வேண்டியுள்ளது.

ஆரம்பத்தில் கோல்புறூக் காலத் தில் இலங்கை கேந்திர முக்கி யத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது. அது யுத்ததந்திர ரீதியில் பார்வை செலுத்தப்பட் டது.

இன்று இலங்கை கேந்திர முக் கியத்துவம் என்ற நிலையில் இருந்து மாறி, தெற்கு தென்கிழக் காசிய நாடுகளுக்கு உலக வியாபாரச்சந்தையின் மையமாக திகழ்கிறது.

ஜே. ஆர். அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை, பிரேமதாச ஆட்சியிலும் இரண் டாவது தடவையாக அறிமுகப் படுத்தப்பட்டது. வெளிநாட்டு மூலதனம் 1989ம் ஆண்டு 18 மில்லியன் டொலராக இருந்தது. 90ம் ஆண்டில் 33 மில்லியன் டொலராக உயர்ந்தது. 1991ம் ஆண்டு மேலும் அதிகரித்துவிட் டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உதவி வழங்கும் அமைப்புக்கள் இலங்கை அரசோடு 1855 மில் லியன் டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மேற்கு லக நாடுகளின் உற்பத்திப்பொ ருட்கள் விற்பனையை கருத்தில் கொண்டு இலங்கையில் 89-91க் கிடையில் 14 அரச நிறுவனங் கள் தனியார் மயமாக்கப்பட்டன. இன்று 33 அரச நிறுவனங்கள் தனியார் மயமாவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு அரசாங் கங்களுக்கு துணை போவதற்கும் அவர்களின் தாராளப் பொருளா தாரக் கொள்கையை நிலை நிறுத்துவதற்கும் அவர்களுக்கு வசதியாக போக்குவரத்து தொலைத்தொடர்பு சாதனங்கள் நிறுவுவதற்கே கூடிய வெளி நாட்டு உதவிகள் பயன்படுத்தப் பட்டன.

இங்கும்கூட இந்த நெருக்கடி யான நேரத்தில் இலங்கை தமது உற்பத்தியில் 45 வீதமானதை தைக்கப்பட்ட ஆடைகள், பொம் மைகள் போன்ற வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட் களிலேயே அக்கறையாக இருந் தன.

இந்த வருடத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வழங் கும் நாடுகள் இலங்கை அரசாங் கம் கேட்டதிலும் பார்க்க 50 இலட்சம் டொலர் உதவியை கூடுதலாகக் கொடுத்தன.

முக்கியமாக பிரேமதாசாவின் அரசை பாதுகாப்பது மாத்திர மன்று, கொழும்பை ஒரு உலகச் சந்தையாக மாற்றுவதின் பிரதி பலிப்பே இக் கூடுதல் நிதிக் கான காரணங்களாகும். இலங் கையின் குடும்ப ஆதிக்க அர சாங்கங்கள் தோன்றியதனால் அவர்கள் தங்கள் குடும்ப நல னுக்காக இனப்பிரச்சனையை முன்வைத்தார்கள்.

இன்றைய நிலையில் இந்த குடும்ப ஆதிக்க ஆட்சி போய் ஐக்கிய தேசியக்கட்சியும், அதி லிருந்து பிரிந்த லலித் காமினிக் கட்சியும் அடுத்த பொதுத் தேர் தலில் வெற்றி பெற முயற்சி செய் கிறார்கள்.

இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் யு. என். பி, லலித்-காமினிக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றிற்குத் தேவையாகவுள்ளது. இந்நிலை யில்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனத்துவேசத்தை கைவிட்டு சமாதானத்தீர்வு வேண்டுமென்று, யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட வேண்டும் என்ப துபோல அண்மைக்காலத்தில் அறிக்கைகள் வெளியிட்டுள்ளது.

இன்றைய இலங்கை அரசாங்கத் திற்கு சுமூகமாக இனப்பிரச்ச னையை தீர்க்கவேண்டும் என் பதற்கு அரசியலைவிட, இரா ணுவத்தின் வளர்ச்சியை கட்டுப் படுத்தவேண்டும் என்பதே முக் கியமாகவுள்ளது. இதனால் விடுதலைப்புலிகளோடு சமரசத் துக்கு வரவேண்டிய நிலையும் உள்ளது. இந்த வகையான இரா ணுவ ஆட்சியை மேற்குலகமும் விரும்பவில்லை அதனால் மேற் குலக நாடுகளும் தங்களது தாராள பொருளாதாரக் கொள் கையால் இலங்கை இனப்பிரச் சினையில் அக்கறைப்படக் கூடும் எனத் தெரிய வருகிறது.

இன்று வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு கொழும்பு சந் தையாக உள்ளது. தமிழீழ மக் களையும் கொழும்பை நோக்கி ஓடச் செய்யக்கூடிய அபாயகர மான நிலையும் ஏற்பட்டு வருகி றது. இதனால் எமது அபிவி ருத்தி குறைந்து தேசியத்தன்மை குலையும் நிலையில் உள்ளது.

